## 19. அசைவாடும் ஆவியானவர் எனக்குள்ளே

### பல்லவி

அசைவாடும் ஆவியானவர் என்மேலே
அனலுட்டும் ஆவியானவர் எனக்குள்ளே

### அனுபல்லவி

தேவ அபிஷேகம் நுகங்களை முறிக்குமே
அவர் அக்கினி என் கட்டுகள் அறுக்குமே
அபிஷேகம் அபிஷேகம் தேவஅபிஷேகம்

### சரணங்கள்

1. அன்பின் ஆவியே பெலத்தின் ஆவியே
தெளிந்தபுத்தியின் ஆவியானவர் எனக்குள்ளே
\- அசைவாடும்

2. பாவத்தை குறித்தும் நீதியை குறித்தும்
கண்டித்துஉணர்த்தும் ஆவியானவர் எனக்குள்ளே
\- அசைவாடும்

3. சகல சத்தியம் எனக்குள்ளே நடத்திடும்
சத்திய ஆவியானவர் எனக்குளளே
\- அசைவாடும்

4. பிதாவை குறித்தும் இயேசுவை குறித்தும்
மகிமை படுத்தும் ஆவியானவர் எனக்குளளே
\- அசைவாடும்